بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*
*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*
*அவர்கள் 23.02.2018 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

இன்றைய நாட்களில் ஜமாஅத் நிலைநாட்டப்பட்டுள்ள இடங்களில் எல்லாம் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பு அடிப்படையில் முஸ்லிஹ் மவ்வூது தினம் கொண்டாடப்படுகிறது. 20 பிப்ரவரி என்பது எத்தகைய தினம் என்றால் அன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று தமக்கு பிறக்கப்போகின்ற ஒரு மகனைப் பற்றி முன்னறிவித்திருந்தார்கள். இது குறித்து ஒரு பிரசுரம் வெளியிட்டிருந்தார்கள். அதில் அவரைப் பற்றி அவரது பல சிறப்புகள் கூறப்பட்டிருந்தன. அந்த பிரசுரம் 20 பிப்ரவரி 1886 அன்று வெளியிடப்பட்டது.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று, வசதிக்கேற்ப 20 பிப்ரவரி அன்று முஸ்லிஹ் மவ்வூது தினம் கொண்டாடப்படுகிறது. அந்த தினத்தில் கொண்டாட வசதிப்படாத இடங்களில் சற்று முன் பின் நாட்களில் கொண்டாடப்படுகிறது. முஸ்லிஹ் மவ்வூது தினம் கொண்டாடுவது, அதன் அடிப்படையில் கூட்டம் நடத்துவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு மகத்தான முன்னறிவிப்பு நிறைவேறியதற்காகவே ஆகும். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்களுடைய பிறப்புக்காக அல்ல. இதனை நான் தெளிவுபடுத்தக் காரணம் தற்போதைய புதிய தலைமுறையைச் சார்ந்தவர்கள் அல்லது குறைமதியாளர்கள் முஸ்லிஹ் மவ்வூது தினம் கொண்டாடுகிறோம். பிறகு மற்ற கலீஃபாக்களின் பிறந்த நாளை ஏன் கொண்டாடுவதில்லை என்கின்றனர். ஒன்றை தெளிவாக விளங்க வேண்டும். இந்த நாள் முஸ்லிஹ் மவ்வூது பிறந்த நாள் அல்ல. அன்னார் பிறந்தது 1889 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதி ஆகும். இந்த தெளிவிற்குப் பிறகு நாம் இந்த முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பு பற்றி கூறுவேன்.

முதலில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளில் நான் அதனைக் கூறுவேன். அது அவர்களின் எழுத்துக்களிலிருந்து நிரூபணமாகிறது. அன்னார் இந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டவர் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது ஆகிய இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் என்றுதான் கருதியிருந்தார்கள். முதல் கலீஃபத்துல் மஸீஹின் கருத்து அவ்வாறே இருந்தது. இந்த முன்னறிவிப்பில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்தான் என்று மற்ற சில பெரியவர்களும் அவ்வாறே கருதி இருந்தனர். அது போன்றே அன்னாருக்கு பல சிறப்பம்சங்கள் இருந்தன. அந்த அடையாளங்கள் நிறைவேறியதை நம்மவரும் மற்றவரும் குறிப்பிட்டுள்ளார்கள்; உணர்ந்தும் இருந்தார்கள். அது சம்பந்தமாக சில சான்றுகளை எடுத்து வைக்கிறேன்.

முதலில் இது சம்பந்தமான முன்னறிவிப்பு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தைகளில் இவ்வாறு உள்ளன. முன்னறிவிப்பு இந்த எளியவன் தொடர்பாக 1886 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதி ஹிஜ்ரி 15 ஜமாதில் அவ்வல் ஆகிய இன்று இதில் கூறப்பட்டபடி இல்ஹாமிய வசனம் எடுத்து வைக்கப்படுகிறது. பிறகு விரிவாக பத்திரிகையில் எழுதப்படும் – இன்ஷா அல்லாஹ்.

முதலாவதாக, அல்லாஹ் மகத்துவமிக்க கருணையாளனான எல்லாவற்றின் மீதும் ஆற்றல் பெற்றவனுமான அல்லாஹ் அவனது பெயர் மகத்தானது. அவன் எனக்கு இல்ஹாம் மூலமாக கூறினான்:

நீர் என்னிடம் கேட்டதற்கிணங்க நான் அருளின் ஓர் அடையாளத்தை உமக்குத் தருகின்றேன். நான் உமது மன்றாடல்களை செவியுற்றேன். மேலும் நான் என் அருள்களால் உமது துஆக்களை ஏற்றுக் கொண்டேன். (லூதியானா, ஹோஷ்யார்பூரை நோக்கி நீர் மேற்கொண்ட) உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கினேன். எனவே ஆற்றல், அருள், இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அளிக்கப்படுகின்றன. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்கு வழங்கப்படுகின்றன. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்கு கிடைக்கிறது. வெற்றி பெற்றவரே! உம்மீது சாந்தி உண்டாவதாக. வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காகவும், கல்லறைகளில் அமுங்கிக் கிடப்பவர்கள் வெளியில் வருவதற்காகவும் இறைவன் இதை கூறியிருக்கிறான். மேலும் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பு, அல்லாஹ்வுடைய வார்த்தையின் அந்தஸ்து மக்களுக்கு வெளிப்படுத்துவதற்காகவும், உண்மை தனது எல்லா அருள்களுடனும் வந்து விடுவதற்காகவும், பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடனும் வெருண்டோடி விடுவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

மேலும் நான் ஆற்றல் மிக்கவன் எனவும், விரும்பவுதை செய்கின்றேன் எனவும் மக்கள் புரிந்து கொள்ளட்டும். நான் உம்முடன் இருக்கிறேன் என அவர்கள் உறுதி கொள்ளட்டும். மேலும் எவர்கள் இறைவனுடைய இருப்பு பற்றி நம்பிக்கை கொள்வதில்லையோ, மேலும் இறைவனுடைய மார்க்கத்தையும், அவனுடைய வேதத்தையும் அவனுடைய தூய தூதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்)

அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் என்ற பார்வையுடனும் பார்க்கிறார்களோ அவர்களுக்கு ஓர் அடையாளம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், குற்றவாளிகளின் வழியை வெளிப்படுத்து –வதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

எனவே உமக்கு ஒரு நற்செய்தி! கம்பீரமான தூய ஒரு மகன் உமக்கு வழங்கப்படுகிறது. ஒரு தூய குழந்தை உமக்குக் கிடைப்பார். அந்த மகன் உமது வித்திலிருந்தே உமது சந்ததி, வழித்தோன்றலாக இருப்பார். அதாவது, அவர் உமது பௌதீக மகனாக இருப்பது மட்டுமின்றி உம்முடைய மகனாகவே இருப்பார். அழகிய, தூய மகன் உமது விருந்தினர் வருகிறார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீர் என்பதுமாகும். அவருக்கு பரிசுத்த ஆவி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர் அசுத்தத்திலிருந்து தூயவராக இருப்பார். அவர் அல்லாஹ்வின் ஒளியாவார். வானத்திலிருந்து வரும் அவர் அருளுக்குரியவராக இருக்கிறார். அவருடன் அருள் இருக்கிறது. அது அவர் வரும்போது உடன் வரும்.

அவர் கண்ணியத்திற்குரியவராகவும், மகத்துவம் கொண்டவராகவும், செல்வம் உடையவராகவும் இருப்பார். அவர் உலகில் வருவார். மேலும் தமது மஸீஹின் ஆவியினாலும் உண்மையின் ஆவியின் அருளினாலும் அதிகமானோரை நோயிலிருந்து தூய்மைப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனெனில் இறைவனுடைய கருணையும் தன்மானமும் அவரை கண்ணியத்திற்குரிய வார்த்தையுடன் அனுப்பியிருக்கிறது.

அவர் மிகவும் புத்திக் கூர்மை உள்ளவராகவும், நுண்ணிய அறிவுடையவராகவும் இருப்பார். மேலும் உள்ளத்தால் சகிப்புத்தன்மை கொண்டவராகவும் இருப்பார். மேலும் வெளிப்புறமான, உட்புறமான ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார். மேலும் அவர் மூன்றை நான்காக்குபவராக இருப்பார். (இதன் பொருள் புரியவில்லை).

திங்கள்கிழமை, வாழ்த்துக்குரிய திங்கள் கிழமை. அவர் உயர்ந்த தகுதியிலுள்ள மிகவும் கண்ணியத்திற்குரிய புதல்வராவார். مَظْهَرُ الْاَوَّلِ وَالْاٰخِرِ۔ مَظْهَرُ الْحَقِّ وَالْعُلَاءِ كَاَنَّ اللّٰهَ نَزَلَ مِنَ السَّمَاءِ அவர் ஆரம்பம், முடிவின் தோற்றமாகவும், உண்மை, உயர்வின் தோற்றமாகவும் இருக்கிறார். அல்லாஹ் வானிலிருந்து இறங்கி வந்தது போன்றிருக்கும். அவருடைய வருகை மிகவும் அருளுக்குரியதாகவும், இறை கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணமாகவும் அமையும். இறைவன் தன் திருப்தி எனும் நறுமணத்தால் மணம் கமழ வைத்த ஒளி வருகிறார். நாம் அவரிடத்தில் நமது ஆவியை ஊதுவோம். இறைவனின் நிழல் அவர் தலை மீது இருக்கும். அவர் மிக விரைவில் முன்னேறுவார். கைதிகளை விடுவிப்பதற்குக் காரணமாகத் திகழ்வார். மேலும் பூமியின் எல்லைகள் வரை புகழ் பெற்று விளங்குவார். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெற்றுக் கொள்ளும். பின்னர் அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். وَكَانَ اَمْرًا مَقْضِيًّا. – இது தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்றாகும். (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 100)

இந்த வார்த்தைகளே முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்புள்ள வார்த்தைகளாகும். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இந்த முன்னறிவிப்பு தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தின் மஹ்மூது அஹ்மது ஆகிய ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் பற்றி கூறினார்கள். எனது முதல் மகன் வஃபாத் ஆனதும் அறிவற்ற மவ்லவிகளும் அவர்களின் நண்பர்களும் கிறித்தவர்களும் இந்துக்களும் அந்த குழந்தை இறந்ததற்காக தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அவர்களுக்கு மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருந்தது. 1886 –ஆம் ஆண்டு பிப்ரவரி 20 –ஆம் தேதி முன்னறிவிப்பில் சில பிள்ளைகள் வஃபாத் ஆவது குறித்தும் கூறப்பட்டிருந்தது. எனவே, சிறு வயதில் சில குழந்தைகள் மரணித்து விடுவதும் அவசியமாக இருந்தது. இருந்தும் அவர்கள் ஆட்சேபனையிலிருந்து விலகவில்லை. அல்லாஹ் எனக்கு இன்னொரு பிள்ளையைப் பற்றி முன்னறிவித்திருந்தான். அந்த பச்சை பிரசுரத்தின் 7 –வது பக்கத்தில் அந்த இன்னொரு மகன் பிறப்பது பற்றி கூறப்பட்டுள்ளது. உமக்கு இன்னொரு பஷீர் தரப்படுவார். அவரது இன்னொரு பெயர் மஹ்மூது ஆகும்.

அன்னார் கூறுகிறார்கள்: அவர் 1 செப்டம்பர் 1888 வரை இந்த நாளில் அன்னார் இதனை அறிவிக்கிறார்கள். அவர் பிறக்கவில்லை. ஆனால் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு ஏற்ப அந்த காலத்திற்குள் பிறப்பார். பூமியும் வானமும் தள்ளிப் போகலாம். ஆனால் அவனது வாக்குறுதி அழிந்து போகாது. இதுவே அந்த முன்னறிவிப்பாகும். இது அந்த பச்சை பிரசுரத்தின் 7 –வது பக்கத்தில் உள்ளது. இதற்கேற்ப ஜனவரி 1889 –ல் மகன் பிறந்தார். அவருக்கு மஹ்மூது என்று பெயர் வைக்கப்பட்டது. அவர் அல்லாஹ்வின் அருளால் உயிருடன் இருக்கிறார். இப்போது அவருக்கு 17 வயது ஆகிறது. இவ்வாறு முதலில் கூறியதற்குப் பிறகு இவ்வாறு ஹகீகத்துல் வஹியில் குறிப்பிடுகிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இன்னும் பல சான்றுகளும் உள்ளன. நிறைய சானறுகளைத் தருவதற்கு பதில் நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய சான்றைக் கூறுகிறேன். அன்னார் முஸ்லிஹ் மவ்வூது பற்றி, அவர்களின் அந்தஸ்து பற்றி என்ன கருதியிருந்தார் என்பது குறித்து ஒரு அறிவிப்பை எடுத்து வைக்கிறேன்.

பீர் மன்சூர் முஹம்மது சாஹிப் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய மரணத்திற்கு ஆறு மாதங்கள் முன்பு எஸ்ஸர்னர் குர்ஆன் பாடம் எழுதிய பீர் மன்சூர் முஹம்மது சாஹிப் அவர்கள் முதல் கலீஃபாவிடம், நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரசுரத்தைப் படித்தபோது, அந்த வாக்களிக்கப்பட்ட மகன் மியான் சாஹிப்தான். அதாவது ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத்தான் என்பது தெரிய வந்தது என்று கூறினார்கள். உடனே முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், எனக்கு முதலிலேயே தெரியும். நீங்கள் பார்க்கவில்லையா? நான் மியான் சாஹிபோடு எவ்வாறு குறிப்பான முறையில் பழகுகிறேன்; மதிப்பு தருகிறேன் என்று கூறினார்கள்.

பீர் சாஹிப் கூறினார்கள்: நான் அதே வார்த்தையை எழுதி உண்மைபடுத்துவதற்காக அவர்களிடம் காட்டினேன். ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்கள் அதில் எழுதினார்கள். இந்த வார்த்தையை நான் பீர் மன்சூர் முஹம்மது சாஹிபிடம் கூறினேன். இவ்வாறு எழுதி அதில் நூருத்தீன் என்று கையொப்பமும் இட்டார்கள். 10 செம்படம்பர் 1913 என்று தேதியும் எழுதினார்கள். அன்னார் கூறினார்கள்: 11 செப்டம்பர் 1913 அன்று மாலை வேலைக்குப் பிறகு அந்த வாசகம் எழுதப்பட்ட நாளுக்கு அடுத்த நாள் முதல் கலீஃபா அவர்கள் கட்டிலில் படுத்திருந்தார்கள். நான் அவர்களின் கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டு இருந்தேன். எந்த பேச்சும் பேசாத நிலையில் உரையாடல் நடைபெறாத நிலையில் முதல் கலீஃபா அவர்கள், ஹஸ்ரத் மிர்ஸா மஹ்மூது அஹ்மத்தான் முஸ்லிஹ் மவ்வூது என்ற முன்னறிவிப்பை நிறைவேற்றுபவர் என்ற கருத்தை இப்போது வெளியிட வேண்டாம். எதிர்ப்பு வந்தால் வெளியிட வேண்டும் என்று தாமே கூறினார்கள்.

இன்னொரு பெரியவர் குலாம் ஹுஸைன் சாஹிப் நம்பர்தார் சியால்கோட் மாவட்டத்தைச் சார்ந்த ஒரு ஊரைச் சார்ந்தவர். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா தான் முஸ்லிஹ் மவ்வூது என்று அறிவித்தபோது எழுதினார். எது அன்புக்குரிய தலைவரும் வழிகாட்டியுமான ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபதுல் மஸீஹ்தான் முஸ்லிஹ் மவ்வூது ஆவார் என்ற செய்தியை 30 ஜனவரி அல் ஃபஸ்ல் பத்திரிகையில் படித்து அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கிறேன் – அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ், நான் கண்ட கனவை உண்மையாக்கிக் காட்டி விட்டான். மேலும் எழுதுகிறார்: ஹுஸூருக்கு தெரிந்திருக்கலாம். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் உயிருடன் இருக்கும் போது அல் ஃபஸ்ல் பத்திரிகை அலுவலகத்தில் சாதி கான் சாஹிப் மர்ஹூம் சியால்கோட்டி ஹுஸூருக்கு வாழ்த்துச் செல்லும்போது அல்லாஹ் எனக்கு கனவில் காட்டியுள்ளான். முதல் கலீஃபாவிற்குப் பிறகு ஹுஸூர் இரண்டாவது கலீஃபா ஆவார்கள். வெற்றி பெறுவீர்கள். உங்கள் மீது வஹியும் இறங்கும். இந்த கனவை நான் முதல் கலீஃபாவிடம் கூறினேன். ஹுஸூர் மிகவும் மகிழ்ச்சியுடன் அதனை உண்மைப்படுத்தினார்கள். இதனால்தான் அவருக்கு இப்போதே எதிர்ப்பு தொடங்கி விட்டது என்று கூறினார்கள்.

சய்யிது ஹாமித் சாஹிப் மர்ஹூம் அவர்களும் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய தமது கனவை கூறினார்கள்: நீங்களே முஸ்லிஹ் மவ்வூது என்று வாதம் செய்தீர்கள் என்றார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது 1944 –ல் நான் தான் முஸ்லிஹ் மவ்வூது என்று அறிவிப்பு செய்தார்கள். ஆனால் எனக்கு அன்னார்தான் கலீஃபதுல்லாஹ் மற்றும் முஸ்லிஹ் மவ்வூது என்று முதல் கலீஃபா இருக்கும்போதே உறுதியாகி விட்டது.

இன்னொரு பெரியவர் ஸுஃபி முதியுர் ரஹ்மான் சாஹிப் பங்காளி அவர்களுக்கு எழுதிய தமது ஒரு கடிதத்தில் அன்னார் முஸ்லிஹ் மவ்வூதிற்கான அறிவிப்பு செய்த போது எழுதினார். எனது ஒரு கனவைக் கூறுவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த கனவை நான் 30 அல்லது 24 வருடங்கள் முன்பு கண்டதாகும். நான் இதனை ஹுஸூரிடம் முன்னரும் ஒருமுறை எழுதியுள்ளேன். இப்போது ஹுஸூர் அவர்கள் முஸ்லிஹ் மவ்வூது என்ற வாதத்தை வைத்த பிறகு நான் கண்ட கனவு இந்த முன்னறிவிப்பு சம்பந்தமானது என்பது எனக்கு உறுதியாகி விட்டது. நான் கண்டது என்னவென்றால், ஒரு ஈது கூட்டம் நடக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓர் உயரமான இடத்தில் நிற்கிறார்கள். பச்சை நிற ஆடை அணிந்து குத்பா கொடுக்கிறார்கள். குத்பா முடிந்ததும் நான் கை குலுக்குவதற்காக அருகில் செல்கிறேன். பார்த்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இல்லை. ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஹ் அவர்கள் நிற்கிறார்கள். அதாவது இரண்டாவது கலீஃபா நிற்கிறார்கள். இந்த கனவை நான் டாக்டர் பத்ருத்தீன் சாஹிபிடமும் சகோதரர் மவ்லவி ஸில்லுர் ரஹ்மான் சாஹிபிடமும் கூறினேன். மவ்லவி ஸில்லுர் ரஹ்மான் சாஹிப் கூறினார்கள்: உமக்கு ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் பற்றிய முன்னறிவிப்பு காட்டப்பட்டுள்ளது. அழகிலும் கருணையினும் உன்னைப் போன்றவராக இருப்பார் என்ற அம்சம் உமக்கு காட்டப்பட்டுள்ளது என்றார். இதுவும் முன்னறிவிப்பின் வார்த்தைகளாகும் .

அதுபோன்று சேக் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் கூறினார்கள்: நாங்கள் பலமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இடமிருந்து கேட்டுள்ளோம். ஒரு முறை அல்ல. பல முறை கேட்டுள்ளோம். முன்னறிவிப்பில் கூறப்பட்டது மியான் மஹ்மூதுதான் என்று கூறியுள்ளார்கள். மியான் மஹ்மூது இடம் எந்த அளவுக்கு மார்க்க உத்வேகம் உள்ளது என்றும் அதற்காக நான் பலமுறை குறிப்பாக துஆ செய்கிறேன் என்றும் அன்னார் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் கூறாத வரை அன்னார் வாதம் செய்யவில்லை. அன்னாருக்கு தெளிவாக அதனை கூறி விடுமாறு கட்டளை வந்த பிறகுதான் அறிவித்தார்கள். பிறகு அன்னார் கூறிகிறார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் வாக்களிக்கப்பட்ட மகனைப் பற்றி முன்னறிவிப்பிக்கப்பட்டவற்றுள் பல அம்சங்கள் நிறைவேறியிருப்பதால் அந்த முன்னறிவிப்பு என்னைப் பற்றிதான் என்று பலரும் கூறியுள்ளார்கள். அவர்களிடம் நான் இவ்வாறே கூறி வந்தேன். அல்லாஹ் எனக்கு கட்டளை இடாமல் நான் அவ்வாறு ஒருபோதும் அறிவிக்க மாட்டேன். இறுதியில், அந்த நாளும் வந்தது. அல்லாஹ் எனது நாவால் அதனை அறிவிக்கச் செய்தான்.

பிறகு அன்னார் ஹோஷியார்பூர் கூட்டத்தில் அறிவிப்பு செய்தபோது கூறினார்கள்: இறைவன் மீது ஆணையிட்டு நான் கூறிக் கொள்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப தமது வாக்களிக்கப்பட்ட மகனாகவும், அன்னாரது பெயரை பூமியின் எல்லை வரை எட்டச் செய்பவனுமாக கூறியது என்னைதான் என்று லாஹூர் கூட்டத்தில் கூறினார்கள். தனித்தவனும் பிடிப்பதில் கடிமையானவனும் ஆகிய இறைவன் மற்றும் எத்தகைய இறைவன் பெயரில் சத்தியம் செய்வது சபிக்கப்பட்டவனின் பணியோ அத்தகைய இறைவன் மீதும் எவன் மீது இட்டுக்கட்டுபவர் அவனது தண்டனையிருந்து தப்பிக்க முடியாதோ அந்த இறைவன் மீது ஆணையாக! இறைவன் இந்த லாஹூரின் நகரில் எண். 13 டெம்புள் ரோடில் ஷேக்

பஷீர் அஹ்மது சாஹிப் அட்வேகேட் வீட்டில் எனக்கு அறிவித்தான். நான்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பை நிறைவேற்றக்கூடிய மகன் ஆவேன். நானே முஸ்லிஹ் மவ்வூது ஆவேன். யார் மூலம் இஸ்லாம் பூமியின் எல்லை வரை பரவுமோ தவ்ஹீது உலகில் பரவுமோ அது நானாவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பை நிறைவேற்றக்கூடியவருக்கு **52** அல்லது **58** அடையாளங்கள் அதாவது **50** –க்கும் மேற்பட்ட அடையாளங்களைக் கூறியுள்ளார்கள். அவர்களிடம் காணப்படும் அந்த அடையாளங்களை நம்மவரும் சரி அன்னியரும் சரி எவ்வாறு பார்த்தார்கள் என்பதைப் பற்றி கூறுகிறேன்.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் வஃபாத்தின்போது டமாஸ்கஸைச் சேர்ந்த சய்யிது அபுல் ஃபரஜ் அல்ஹஸ்னி என்பவர் கூறுகிறார். அமிருல் முஃமினின் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வஃபாத் ஆனதில் எமது உள்ளங்கள் வருத்தத்தால் நிறைந்தன. கவலை ஏற்பட்டுள்ளது. இந்த கவலை உலகம் முழுவதும் உள்ள எல்லா அஹ்மதிகளையும் பாத்தித்துள்ளது. குறிப்பாக அஹ்மதிய்யா ஜமாஅத் டமாஸ்கஸுக்கு கவலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இந்த ஜமாஅத் ஹுஸூர் அவர்களால் நடப்பட்ட செடியாகும். இது அன்னாரது அருளுக்குரிய கையே நட்டியுள்ளது. அன்னாரது குறிப்பான ஆதரவும் கவனமும் நீர் பாய்ச்சியது. அவ்வாறு இந்த மரம் வளர்ந்தது; மலர்ந்தது. அல்லாஹ், அவர்களைப் பற்றி உண்மையாகவே கூறினான். சமுதாயங்கள் அவர்களிடம் இருந்து பரக்கத்தைப் பெறும் என்று நாங்கள் அன்னாரின் துஆவின் பரக்கத் மற்றும் கவனத்தின் காரணத்தால் இறை அருளைப் பெற்றோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பின் உண்மைத்துவத்தின் வெளிப்பாட்டை இறைவன் அன்னியர் மூலம் தோன்றச் செய்தான். இவ்வகையில் ஒரு கண்ணித்திற்குரிய அஹ்மதி அல்லாத ஓர் ஆலிம் மவ்லவி சமீவுல்லாஹ் சாஹிப் பாரூகி என்பவர் பாகிஸ்தான் உருவாவதற்க முன் உண்மையை வெளிப்படுத்துதல் என்ற பெயரில் ஒரு பிரசுரத்தில் எழுதினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு செய்தி கிடைக்கிறது. உன்னுடைய சந்ததியில் இருந்து உன்னுடைய மகன் ஒருவரை உன் ஜமாஅத்திற்காக நான் நிலை நாட்டுவேன். அவருக்கு எனது வஹியை தந்து கண்ணியப்படுத்துவேன். அவர் மூலமாக உண்மையை வெளியே கொண்டு வருவேன். நிறைய பேர் உண்மையை ஒப்புக் கொள்வர். அவர் கூறுகிறார்: இந்த முன்னறிவிப்பைப் பாருங்கள். மீண்டும் மீண்டும் படியுங்கள். பிறகு ஈமானுடன் கூறுங்கள். இந்த முன்னறிவிப்பு நிறைவேறவில்லையா**?** எப்போது இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டதோ அப்போது இந்த இப்போதைய கலீஃபா ஒரு சிறு பையனாக இருந்தார். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் இந்த சிறுவனை கலீஃபாக ஆக்குமாறு எந்த உயிலும் கூறவில்லை. கிலாஃபத்தின் தேர்வு மக்களின் கருத்துக்கு விடப்பட்டிருந்தது. இந்த வகையில் பெரும்பாலார் ஹக்கீம் நூருத்தீன் சாஹிபை கலீஃபாவாக ஏற்றுக் கொண்டனர். அப்போது அவரது எதிரிகள் வாக்களிக்கப்பட்ட மகன் பற்றிய முன்னறிவிப்பைக் கூறி ஏளனமும் செய்தனர். முதல் கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட்டபோது பலரும் ஏளனமாகப் பேசினர். மகன் வருவார் என்றார். பாருங்கள். மகன் இப்போது வரவில்லை என்றனர். ஆனால் ஹக்கீம் சாஹிப் வஃபாத் ஆனதும் மிர்ஸா பஷீருத்தீன் அஹ்மதிய்யா கலீஃபாவானார்.

இதனை அஹ்மதி அல்லாதவர் எழுதுகிறார். நான் அஹ்மதி இல்லை. இது உண்மையாகும் அன்னாரின் காலத்தின் அஹ்மதிய்யத் அடைந்த முன்னேற்றம் வியக்கத்தக்கதாக இருந்தது. மிர்ஸா சாஹிபின் காலத்தில் அஹ்மதிய்யத் மிகவும் குறைவாக இருந்தது. கலீஃபா நூருத்தீன் சாஹிபின் காலத்திலும் சிறப்பான எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஆனால் தற்போதைய கலீஃபாவின் காலத்தில் மிர்ஸாயிய்யத் உலகின் அனைத்து பகுதிகளிலும் பரவி விட்டது. நிலைமையைப் பார்த்தால் அடுத்த மக்கள்தொகை கணக்கெடுப்பில் அவர்களின் எண்ணிக்கை **1931** –ல் இருந்ததை விட இரு மடங்காகி விடும். இவர்களை எதிர்க்கும் எதிரிகளின் முயற்சிகள் முன்னர் இருந்ததை விட அதிகமாக ஒருங்கிணைந்து செயல்பட்டும் கூட இதுவே நிலையாகும். மேலும் மிர்ஸா சாஹிபின் சந்ததியில் இருந்து அவரது முன்னறிவிப்புக்கு ஏற்ப ஜமாஅத்திற்காக ஒருவர் நிறுத்தப்பட்டார். அவரது காலத்தில் வியத்தகு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. அதிலிருந்து மிர்ஸா சாஹிவின் முன்னறிவிப்பு முழுக்க முழுக்க நிறைவேறி விட்டது என்பது தெளிவாக தெரிகிறது.

பிறகு இந்தியாவின் ஒரு முஸ்லிம் அல்லாத சீக்கிய பத்திரிகையாளர் அர்ஜுன்சிங், ரங்கின் பத்திரிகையின் எடிட்டர் அமிர்தசரஸ் கூறுகிறார். மிர்ஸா சாஹிப் **1901** –ல் கூறினார். அப்போது தற்போதைய கலீஃபா சிறு பையனாக இருந்தார். அப்போது முன்னறிவிப்பு செய்தார். எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும் ஒரு நாள் அவன் எனது அன்புக்குரியவன் ஆவான் என்றும் முன்னறிவித்தார். அவனை விட்டு எல்லா இருளையும் அகற்றுவேன். ஓர் உலகையே திருப்பிக் காட்டுவேன்.

எனது எதிரிகளை இழிவுபடுத்திய எனது இறைவன் தூயவன். இந்த முன்னறிவிப்பு உண்மையில் ஆச்சரியமானது. **1901** –ல் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது பெரிய ஆலிம் ஃபாஸில் அல்ல. அல்லது அவருக்கு பெரிய அளவில் அரசியல் திறமையும் இல்லை. அந்த நேரத்தில் உனது மகன் இவ்வாறு இருப்பார் என்று கூறுவது ஒருவரது ஆன்மீக ஆற்றலுக்கு ஒரு சான்று ஆகும். மிர்ஸா சாஹிப் ஒரு வாதத்தை வைத்து ஓர் அரியணைக்கு அடிக்கல் நாட்டியுள்ளார் என்று எவரும் கூறலாம். எனவே எனக்குப் பிறகும் எனது பிரதிநிதித்துவம் என்று மகனுக்கு கிடைக்க வேண்டும் என்று விரும்பி உள்ளார் என்றும் கூறலாம். ஆனால் அந்த எண்ணம் தவறாகும். ஏனெனில் மிர்ஸா சாஹிப் தனது பிரதிநிதித்துவம் பற்றிய நிபந்தனை வைக்கவே இல்லை. கண்டிப்பாக கலீஃபா எனது குடும்பத்தைச் சார்ந்தவர்தான் வர வேண்டும் என்று கூறவே இல்லை. அவருக்கு பிறகு கலீஃபாவாக வந்திருக்கும் நபருக்கும் மிர்ஸா சாஹிபின் குடும்பத்துடன் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. முதல் கலீஃபாவிற்குப் பிறகும் கூட வேறு ஒருவர் கலீஃபாவாக வருவதும் கூட மிகவும் சாத்தியமான ஒன்றாகவே இருந்தது. இந்த வகையில் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அமீர் ஜமாஅத் லாஹூர் கலீஃபாவாக ஆக்கப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப்பட்டவராக இருந்தார். ஆனால் பெரும்பாலார்

மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அவர்களையே ஆதரித்தனர். அவர் கலீஃபாவானார். அவர் எழுதுகிறார்: பெரிய மிர்ஸா சாஹிபிடம் ஓர் ஆன்மீக ஆற்றலும் வேலை செய்யவில்லை எனில் அவர் எவ்வாறு அறிந்தார்? எனது மகன் இவ்வாறு ஆவார் என்று மிர்ஸா சாஹிப் அவ்வாறு அறிவித்த போது அவருக்கு 3 மகன்கள் இருந்தனர். அவர் 3 பேருக்கும் துஆ செய்து வந்தார். ஆனால் முன்னறிவிப்பு நிறைவேறியது. உலகில் பெரும் மாற்றம் ஏற்படுத்தியது.

பிறகு முஸ்லிஹ் மவ்வூது வருகையின் நோக்கம் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பும் அல்லாஹ்வின் வார்த்தையின் அந்தஸ்தும் மக்களிடம் வெளிப்பட வேண்டும். இந்தியா பாகிஸ்தான் துணைக் கண்டத்தின் பிரபல முஸ்லிம் தலைவர் மவ்லவி சஃபர் அலி கான் சாஹிப் ஸமீன்தார் பத்திரிகையின் ஒரு புகழ்பெற்ற கவிஞர் எழுதுகிறார். இவர் மிகவும் தெளிவான வார்த்தைகளில் ஒப்புக் கொண்டவாறு இதை எழுதுகிறார்: காதைத் திறந்து கேளுங்கள். நீங்களும் உங்கள் மக்களும் மிர்ஸா மஹ்மூதை கியாமத் வரை எதிர்க்க இயலாது. மிர்ஸா மஹ்மூது இடம் குர்ஆனை உள்ளது. குர்ஆனின் அறிவு உள்ளது. உங்களிடம் என்ன உள்ளது? நீங்களே கனவில் கூட குர்ஆனை படித்ததில்லை. மிர்ஸா மஹ்மூது இடம் எத்தகைய ஜமாஅத் இருக்கிறது என்றால் அந்த ஜமாஅத் தனது உயிர், பொருள், அனைத்தையும் அன்னாரின் ஒரு சைகையில் அன்னாரின் காலடியில் வைத்து விடும். மிர்ஸா மஹ்மூதிடம் முபல்லிக்மார்கள் உள்ளனர். அவர்கள் உலகின் எல்லா இடத்திலும் தமது கொடியை நாட்டி உள்ளார்கள்.

வாக்களிக்கப்பட்ட மகன் குறித்து முக்கியமான இன்னொரு முன்னறிவிப்பு என்னவென்றால், இவர் கைதிகளை விடுவிப்பதற்குக் காரணமாக இருப்பார். இதுவும் பல்வேறு கோணத்தில் நிறைவேறியது. மனித அறிவு வியந்து போகும் அளவில் நிறைவேறி இருந்தது. காஷ்மீர் விடுதலை இயக்கம் அதற்கு அத்தாட்சியாகும். இந்த திட்டத்தை வெற்றி பெறச் செய்த பெருமை All India Kashmir Committee –றகே சேரும். இந்தியா மற்றும் பாகிஸ்தானின் பெரும் பெரும் தலைவர்கள், ஸுல்பிகார் அலி கான், டாக்டர் சர் முஹம்மது இக்பால், காஜா ஹஸன் நியாமி தெஹ்லவி, சய்யிது ஹபீப், சியாசத் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் இவர்களின் ஆலோசனையின் படி 25 ஜுலை 1931 ஷிம்லாவில் நிறுவப்பட்டது. இக்கமிட்டியின் தலைமைப் பொறுப்பு இரண்டாவது கலீஃபாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்னாரின் வெற்றிகரமான தலைமையின் கீழ் காஷ்மீர் முஸ்லிம்கள் மனித உரிமை மறுக்கப்பட்ட நீண்ட காலமாக அடிமையாக இருந்தவர்கள் மிகவும் குறைந்த காலத்தில் சுதந்திர காற்றை சுவாசித்தனர். அரசியல் சமூக உரிமைகள் ஒப்புக் கொள்ளப்பட்டன. அப்பகுதியில் முதல் முறையாக சட்டசபை நிறுவப்பட்டது. அன்னாரது பேச்சு மற்றும் எழுத்து காரணமாக பொருத்தமான பிரதிநிதித்துவம் கிடைத்தது. முஸ்லிம் பிரஸ் அன்னாரது பணிகளை ஒப்புக் கொண்டவாறு அன்னாரை பாராட்டி எழுதின. இக்காலத்தில் கஷ்மீரில் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்தது. கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் மிர்ஸா சாஹிபை தலைவராக ஏற்றுக் கொண்டனர். அன்னார் இப்பணியை வெற்றியைக் கருத்தில் கொண்டு மிகச் சிறந்த முறையில் செய்தார்கள். கருத்து வேறுபாடு காரணமாக மிர்ஸா சாஹிபை தேர்ந்தெடுக்காமல் இருந்தால் திட்டம் தோல்வி அடைந்திருக்கும். கருணைக்குரிய இந்த உம்மத் நஷ்டத்தை சந்தித்திருக்கும்.

பிறகு குர்ஆன் விரிவுரையாளர் அல்லாமா அப்துல் மாஜித் தர்யாபாதி சித்கே ஜதீது பத்திரிகையின் தலைமை ஆசிரியர் முஸ்லிஹ் மவ்வூது வஃபாத்தின்போது எழுதினார். அப்போது முஸ்லிஹ் மவ்வூதுடைய திருக்குர்ஆன் தொண்டினைப் பாராட்டி எழுதினார். திருக்குர்ஆன் மற்றும் அதன் அறிவை உலக அளவில் பரப்புதல் இஸ்லாத்தை பரப்புதல் ஆகியவற்றிற்காக அன்னார் திட உறுதியுடன் நீண்ட காலமாக தொடர்ந்து பணி செய்தார்கள். இவருக்கு அல்லாஹ் திருக்குர்ஆனின் அறிவை வழங்கியிருந்தான். அவரது விளக்கவுரையும் மிகவும் உயர்ந்ததாக இருந்தது.

ஓர் அமெரிக்க பாதிரி காதியான் வந்தார். இதுவும் உட்புற வெளிப்புற அறிவால நிரம்பப்பட்டிருந்தார்கள் என்பதற்கான ஒரு உதாரணமாகும். 1914 –ல் நடந்தது. அவர் சில அஹ்மதிகளுக்கு முன் சில கேள்விகளை வைத்தார். அவை மிகவும் முக்கியமானவையாகும். நான் அமெரிக்காவில் இருந்து இங்கு வந்து நிறைய ஆலிம்களிடம் இதனை கேட்டு விட்டேன். ஆனால் திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. இப்போது இந்த கேள்வியை உங்கள் கலீஃபாவிடம் எடுத்து வைக்க வந்துள்ளேன். அவர் என்ன எதில் தருகிறார் என்று பார்ப்போம் என்றார்.

ஷிம்லாவைச் சார்ந்த மவ்லவி உமருத்தீன் சாஹிப் கூறுகிறார்: அவரது கேள்வி எவ்வளவு சிக்கலானதாகவும் வித்தியாசமானதாகவும் இருந்தது என்றால் அந்த கேள்வியைக் கேட்டு எனக்கு உறுதி ஏற்பட்டது. ஹஸ்ரத் சாஹிப் முற்றிலும் சிறிய வயது. முறைப்படி படிக்கவில்லை. பொது அறிவும் குறைவு. எனவே இந்த கேள்விக்கு பதில் தர முடியாது. இதனால் ஜமாஅத் பற்றி தப்பெண்ணம் ஏற்படும். ஹஸ்ரத் சாஹிப் பதில் சொல்லவில்லை என்றால் இந்த அமெரிக்க பாதிரி திரும்பிப் போய் முழு உலகிலும் இதனை பிரச்சாரம் செய்வார். அஹ்மதி கலீஃபாவுக்கு ஒன்றும் தெரியவில்லை. கிறித்தவத்திற்கு எதிராக இவரால் நிற்க ஒருபோதும் முடியாது. இவர் பெயரளவில்தான் கலீபா என்று கூறுவாரே என்பது மவ்லவி சாஹிபின் எண்ணமாக இருந்தது. இந்த நிலையில் நான் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளானேன். அமெரிக்க பாதிரியை ஹஸ்ரத் சாஹிபை சந்திக்காமல் அப்படியே திருப்பி அனுப்ப முயற்சி செய்தேன். ஆனால் எனது முயற்சி வெற்றி பெறவில்லை. நான் கண்டிப்பாக சந்தித்து விட்டே செல்வேன் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். எனவே நான் ஹஸ்ரத் சாஹிபிடம் சென்று அமெரிக்க பாதிரி வந்திருக்கிறார். தங்களிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறார். என்ன செய்வது என்று கேட்டேன். ஹஸ்ரத் சாஹிப், எந்த தயக்கமுமின்றி அழைத்து வாருங்கள் என்றார்கள். பிறகு நான் அவரை அழைத்து வந்தேன். இருவருக்கும் இடையில் நான்தான் மொழிபெயர்ப்பாளராக இருந்தேன். அமெரிக்கன் பாதிரி சம்பிரதாயமான பேச்சுக்குப் பிறகு தனது கேள்வியை ஹஸ்ரத் சாஹிபிடம் எடுத்து வைத்தார். அதன் பொருளை நான் கூறினேன். முஸ்லிஹ் மவ்வூது மிகவும் நிதானமாக அந்த கேள்வியைக் கேட்டார்கள். பிறகு அதற்கு எத்தனை திருப்திகரமான பதில் கொடுத்தார்கள் என்றால் அதனைக் கேட்டு நான் வியந்தேன். எனக்கு இவ்வாறு அன்னார்

ஞானமிக்க திடமான பதில் தருவார்கள் என்ற நம்பிக்கை வரவில்லை. நான் அந்த பதிலை அமெரிக்கன் பாதிரிக்கு கூறியதும் அவரும் ஆச்சரியப்பட்டார். இன்று வரை நான் இத்தகைய அறிவுப்பூர்வமான உரையாடலையும் சான்றுகளையும் எவரது வாயிலிருந்தும் கேட்டதில்லை. உங்கள் கலீஃபா பெரும் அறிஞர். உலக மதங்கள் குறித்து நல்ல அறிவு இருக்கிறது. இதனை கூறி விட்டு மிகவும் மரியாதையுடன் ஹஸ்ரத் சாஹிப் உடைய கையை முத்தமிட்டு விட்டு சென்று விட்டார்.

பிப்ரவரி 1945 –ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் லாஹூரிலுள்ள அஹ்மதி விடுதியில் இஸ்லாத்தின் பொருளாதார நிலைபாடு குறித்து உரை நிகழ்த்தினார்கள். அன்னாரிடம் உலகியல் அறிவும் நன்றாக இருந்தது. உரைக்குப் பிறகு அந்த கூட்டத்தின் தலைவர் லாலா ராம்சந்த் ஒரு சிறிய உரை நிகழ்த்தினார். அதில் கூறினார்: நான் என்னை மிகவும் பேறு பெற்றவனாகக் கருதுகிறேன். எனக்கு இத்தகைய மதிப்பு வாய்ந்த சொற்பொழிவைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அஹ்மதிய்யா இயக்கம் முன்னேறுவதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. மிக மிக வளர்ச்சி பெருகுகிறது. சொற்பொழிவை நீங்கள் கேட்டீர்கள். இதில் ஹுஸூர் மிகவும் மதிப்புமிக்க புதிய புதிய விஷயங்களை குறிப்பிட்டார்கள். எனக்கு இந்த உரையினால் பெரும் பலன் கிடைத்துள்ளது. நீங்களும் இந்த மதிப்பு வாய்ந்த் விபரங்களிலிருந்து பலன் பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் அமைதியாக உரையைக் கேட்டீர்கள். நான் என் சார்பாகவும் உங்கள் அனைவரின் சார்பாகவும் ஜமாஅத்தின் இமாமுக்கு இலட்சோப இலட்சம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னார் மிகவும் மதிப்புமிக்க செய்திகளைக் கொண்ட உரையை நமக்கு வழங்கியுள்ளார்கள்.

ஜனாா் அக்தர் சாஹிப் எம்.ஏ பாட்னா பல்கலைக்கழக உருது பிரிவின் தலைவர் பேராசிரியர் அப்துல் மன்னார் பெதஸ் ஃபார்ஸி துறையின் முன்னாள் தலைவர் பாட்னா பல்கலைக்கழகம். இவர் தஃப்ஸீரே கபீர் சம்பந்தமாக தமது ஒரு சம்பவத்தைக் கூறுகிறார். நான் ஒன்றுக்கு இரண்டு முறை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் தஃப்ஸீரே கபீரின் சில தொகுப்புகளை பாட்னா பல்கலைக்கழகத்தின் ஃபார்ஸி துறையின் தலைவரிடம் கொடுத்தேன். அவர் இதனை படித்து விட்டு எத்தனை தாக்கத்திற்குள்ளானார் என்றால் இவர் இதனை படித்து விட்டு பாட்னாவிடம் ஷம்சுல் ஹுதா மத்ராஸின் அரபி பிரிவிடம் சில தொகுப்புகளை வழங்கினார். ஒருநாள்அவர் எல்லா ஆலிம்களையும் அழைத்து தமது கருத்தைக் கேட்டார். அன்னார் குர்ஆனிய அறிவுகள் வழங்கப்படுவார் என்பதும் முன்னறிவிப்பாகும். ஒரு ஆலிம் கூறினார்: ஃபார்ஸி தஃப்ஸீர்களில் இதுபோன்ற தஃப்ஸீர் இல்லை. பேராசிரியர் அப்துல் மன்னான் கேட்டார். அரபி தஃப்ஸீர்களைப் பற்றி என்ன அபிப்பிராயம் என்று கேட்டபோது அமைதியாக இருந்தார். சிறிது நேரம் கழித்து ஒருவர் கூறினார்: பாட்னாவில் எல்லா அரபி தஃப்ஸீர்களும் கிடைக்கவில்லை. எகிப்து மற்றும் சிரியாவில் உள்ள அரபி தஃப்ஸீர்களையும் பார்த்த பிறகே கருத்து தெரிவிக்க முடியும். பேராசிரியர் சாஹிப் பழைய அரபி தஃப்ஸீர்களை குறிப்பிட்டார். பிறகு கூறினார்கள்: இவற்றில் எல்லாம் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூதின் தஃப்ஸீரில் காணப்படுவது எந்த தஃப்ஸீரிலும் இல்லை. நீங்கள் சிரியா, எகிப்தில் இருந்து புதிய தஃப்ஸீர் வாங்குங்கள். சில மாதங்கள் பார்த்து விட்டு என்னிடம் கூறுங்கள். ஃபார்ஸி மற்றும் அரபி ஆலிம்கள் வியந்து போனார்கள்.

ஒரு வாரந்திர பத்திரிகை எடிட்டர் லாலா கரம் சந்த் என்பவர் சில பத்திரிக்கையாளர்களுடன் காதியான் சென்றார். அவர் ஹுஸூர் அவர்களால் மிகவும் கவரப்பட்டார். தமது பத்திரிகையில் எழுதவும் செய்தார். அவர் கூறினார்: நான் ஸஃபருல்லாஹ் கான் சாஹிபை பெரிய அறிவாளி என்று நினைத்தேன். அப்போது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் வைஸ்ராய் உடைய Executive Council –ன் உறுப்பினராக இருந்தார்கள். பஷீருத்தீன் மஹ்முது அஹ்மது சாஹிபுக்கு முன்னால் அவரது மதிப்பு குறைவாகும். இவர் ஒவ்வொரு விஷயத்திலும் மிகச் சிறந்த கருத்தைக் கொண்டிருக்கிறார் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா உடைய தகுதி மிகவும் உயர்ந்தது; மிகச் சிறந்த கருத்தை கொண்டுள்ளார். மிகச் சிறந்த ஆதாரங்களை தருகிறார். இவருக்கு அளவற்ற நிர்வாகத்திறன் உள்ளது. இத்தகைய மனிதன் தமது கூட்டத்தை மிக உயரத்திற்கு எடுத்துச் செல்ல முடியும்.

ஒரு அறிவுத்திறன் உள்ள பெரியவர் காதியான் மாநாட்டுக்கு வந்திருந்தார். அவர் முஸ்லிஹ் மவ்வூது மற்றும் அவர்களது பின்பற்றுபவர்கள் பற்றி கூறினார். அவரைப் பற்றிய எல்லா விஷயத்துடன் ஒன்றைக் கண்டேன். அது என்னவென்றால் முழு ஜமாஅத்தும் முழு கூட்டமும் தமது கலீஃபாவின் ஒரு சில விரலின் அசைவில் சென்று கொண்டிருந்தது. ஹஸ்ரத் இமாம் ஜமாஅத் அஹ்மதிய்யத் தொடர்பாக அன்னாருக்கு எழுத்தாற்றலும் இருந்தது. சொற்பொழிவிலும் மிகச் சிறந்தவராக இருந்தார். இயக்கத்துக்கு மிகச் சிறந்த கவர்னர் ஆவார் என்ற முடிவுக்கு வந்தேன் என்றார்.

இவ்வாறு நம்மவரும் அன்னியரும் முஸ்லிஹ் மவ்வூது உடைய கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தனர். அவர்கள் அன்னாரது சிறப்புகளைத் தெரிந்திருந்தார்கள். அவர்களை அது ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. முன்னறிவிப்பில் இவை அனைத்தும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இந்த கூட்டங்களில் இது சம்பந்தமான முன்னறிவிப்புகளைக் கேட்டு நாம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய தகுதியை உயர்த்துவதற்காக துஆ செய்ய வேண்டும். அத்தோடு நாம் நம்மையும் ஆய்வு செய்ய வேண்டும். அஹ்மதிகள் ஒவ்வொருவரும் ஓர் உறுதியுடன் அஹ்மதிய்யத்திற்காக தமது எல்லா தகுதிகளையும் பயன்படுத்துவது அவசியமாகும். இதனை நாம் செய்தால் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை நம் வாழ்விலேயே முன்னை விட அதிகமாக ஏற்படுவதை பார்ப்போம். அல்லாஹ் நமக்கு அதற்கு நல்வாய்ப்பினை வழங்குவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
on 23.02.2018
Translated by Muallim M. Nizamuddeen
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516